

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (11.04.2025) கீழ்தாமரைப்பாக்கம் மற்றும் தென்மகாதேவமங்கலம் கிராமங்களை இணைக்கும் செய்யாற்றின் குறுக்கே கட்டுப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்) மாநில தடகளச் சங்கத் துணைத்தலைவர் மரு.எ.வ.வே.கம்பன் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விஷ முறிவு சிகிச்சை மையத்துடன் தரம் உயர்த்தி - கடவூர் ஊராட்சி ஒன்றியம்

# பாலவிடுதியில் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனை அமைக்கப்படுமா?

## சட்டப்பேரவையில் திருமதி. சிவகாம சுந்தரி கோரிக்கை!

சென்னை, ஏப்.13-

சட்டப்பேரவையில் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி கழக உறுப்பினர் திருமதி. சிவகாம சுந்தரி எழுப்பிய கேள்வியும், அதற்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதிலும் வருமாறு:-



**திருமதி. சிவகாமசுந்தரி:** கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியம், பாலவிடுதி பகுதியில் விஷமுறிவு சிகிச்சை மையத்துடன் கூடிய மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியத்திற்குட்பட்ட பாலவிடுதி கிராம மக்கள் தொகை 7,912 ஆகும். இங்கு ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாது, இந்த ஒன்றியத்தில் ஏற்கெனவே தாலுகா அரசு மருத்துவமனை ஒன்றும், கடவூர் மற்றும் காணியாளம்பட்டி ஆகிய இடங்களில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களும், 18 துணை சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இந்த எல்லா அமைப்புகளிலும் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, பாம்பு கடிக்கான ASV என்ற மருந்தும், நாய்க்கடிக்கான ARV என்ற மருந்தும், கடந்த இரண்டு ஆண்டுகளாக இருப்பு வைக்கப்பட்டு, பாம்பு கடிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்பதை தங்களின் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி க. சிவகாமசுந்தரி:** எனது கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கடவூர் ஊராட்சி ஒன்றியம், பாலவிடுதி, முள்ளிபாடி மற்றும் மாவத்தூர் ஊராட்சி பகுதிகள் கடவூர் மலையின் அருகில் உள்ள பகுதியாகும். இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும்பாலானோர் விவசாயம் மற்றும் கால்நடைகள் வளர்ப்பதை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். அவர்கள் பணியாற்றும் இடங்களில் விஷ ஜந்துக்கள் ஏதேனும் கடிக்க நேர்ந்தால், அவர்களைக் காப்பாற்ற அதிக தூரம் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதனால் பலர் இறந்துவிடும் சூழலும் ஏற்படுகிறது. எனவே, பாலவிடுதி துணை சுகாதார நிலையத்தை, ஆரம்ப சுகாதார நிலையமாக தரமுயர்த்தி, விஷக்கடி மருத்துவ வசதியை ஏற்படுத்தி தர வேண்டுமாறு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்:** முதலில் விஷக்கடிக்கு சிகிச்சை என்று சொல்லி, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான வேண்டுகோள் விடுத்திருக்கிறார். கடவூர் ஒன்றியத்தை பொறுத்தவரை மைலம்பட்டியில் இருக்கிற கடவூர் தாலுகா மருத்துவமனை தற்போது கூடுதலாக 9¾ கோடி ரூபாயில் புதிய கட்டடம் ஒன்று கட்டுவதற்கான கருத்துரு பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தக் கட்டடத்தில் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, எதிர்காலத்தில் விஷ முறிவு சிகிச்சை பிரிவு ஒன்று அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தமிழ்நாட்டை பொறுத்தவரை, கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு பாம்பு கடிக்கு அந்தந்த துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்து இருப்பு வைக்கப்பட்டிருந்த காரணத்தினால், 34,859 நபர்கள் பாம்பு கடிக்கு தடுப்பூசியின்மூலம் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். 9 இலட்சத்து 60 ஆயிரத்து 85 நபர்களுக்கு நாய்க்கடிக்கான தடுப்பூசி போடப்பட்டு, பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். கரூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, 32,610 நபர்களுக்கு நாய்க்கடி தடுப்பூசியும், 1,193 நபர்களுக்கு பாம்பு கடி தடுப்பூசியும் போடப்பட்டு பாதுகாப்பாக பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதை தங்களின் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி க. சிவகாமசுந்தரி:** அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், மாயனூர் ஊராட்சியில் ஆரம்ப துணை சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமாறு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் மா. சுப்பிரமணியன்:** ஏற்கெனவே ஒன்றிய அமைச்சர் அவர்களை சந்தித்து, 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கேட்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று விதிமுறைகள் இடம் கொடுப்பின் நிச்சயம் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து தருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு உறுப்பினர் திருமதி சிவகாம சுந்தரியின் கேள்விக்கு அமைச்சர் மா. சுப்பிரமணியன் பதிலளித்தார்.

### வேடச்சந்தூரில் —

# நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் 'சுற்றுலா மாளிகை' கட்டப்படும் !

## சட்டப் பேரவையில் — அமைச்சர் எ.வ.வேலு உறுதி!

சென்னை, ஏப்.13-

"வேடச்சந்தூரில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தில் சுற்றுலா மாளிகை கட்டப்படும்" என, சட்டப் பேரவையில், பொதுப் பணிகள் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.

கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-



எனது வேடச்சந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு எரியோடு பேரூராட்சிக்குட்பட்ட ஒரு ஏக்கர் நிலம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமாக இருக்கிறது. அது பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்திலே ஆய்வு மாளிகை கட்டப்பட்டு அது மிகப் பழமையான கட்டடமாக இருந்த காரணத்தால் இடிந்து போய் விட்டது. அந்த இடத்திலே சில ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டன. அதையெல்லாம் நாங்கள் அகற்றியிருக்கிறோம். எனவே, அந்த இடத்திலே எங்களுக்கு ஒரு ஆய்வு மாளிகை, ஆய்வு மாளிகை என்று சொன்னால் நாங்கள் பெரியதாக கேட்கவில்லை. மொத்த நிர்வாகத்திற்கு office-க்கு அதே போல ஒரு room இருந்தால்கூட போதும் எங்களுக்கு. அதனால் அந்த இடத்தில் கட்டி ஒரு compound சுவர் கட்ட வேண்டும். மொத்தத்திற்கு 85 இலட்சம் ரூபாய் தான் estimate. எனவே, அமைச்சரிடத்திலே 2021 ஆம் ஆண்டிலிருந்து நான் கேட்டுக்கொண்டே இருக்கிறேன். அமைச்சர் அவர்களும் கனிவோடு பரிசீலனை செய்து இந்த ஆண்டு அதை செய்து தருவதாக கூறி யிருக்கின்றார்கள். கண்டிப்பாக இந்த ஆண்டே அதை செய்து தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் எ.வ.வேலு: தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிற்கு பொதுப் பணித் துறையின்கீழ் 109 சுற்றுலா மாளிகை கட்டப்பட்டு அவையெல்லாம் பராமரிப்பிலே இருக்கிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் அவர்கள் குறிப்பிட்டதுபோல அவர் நேரடியாக என்னிடத்திலே சொன்னார். வேடச்சந்தூரிலே நகரின் மையப்பகுதியிலே ஒரு ஏக்கர் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. நாம் அதிலே கட்டடம் கட்டவில்லையென்று சொன்னால் தனியார் யாராவது ஆக்கிரமித்து விடுவார்கள். எனவே நெடுஞ்சாலைத் துறை யினுடைய சொத்தை காப்பாற்ற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு கட்ட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி பல சட்டமன்ற உறுப்பினர்கள் என்னிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தப் பட்டியலில்தான் அந்த வேடச்சந்தூரும் இருக்கிறது. அதற்கு இந்த ஆண்டே முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு முன்னுரிமை அளிக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### கடலூர் மாவட்டத்தில் செம்மண்டலம்

# அடுக்குமாடி குடியிருப்பு பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டுக்கான ஆணை!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் வழங்கினார்!

கடலூர்,ஏப்.13-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா ஆகியோர் முன்னிலையில் செம்மண்டலம் அடுக்குமாடி குடியிருப்பு பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான ஆணையினை நேற்று முன்தினம் (11.04.2025) வழங்கினார்.

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் பொது மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் அனைவருக்கும் வீடு என்பதன் அடிப்படையில் வீட்டு மனைப்பட்டா இல்லாதவர்களுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்குவதுடன், குடிசை வீட்டில் வசிப்பவர்களுக்கு நிரந்தர கட்டமைப்புடன் கூடிய கான்கிரீட் குடியிருப்பு அமைப்பதற்கு கலைஞர் கனவு இல்லங்கள், விரிவான பழங்குடியினர் குடியிருப்பு இல்லங்கள், சமத்துவபுர இல்லங்கள் என பல்வேறு திட்டத்தின் கீழ் நிரந்தர குடியிருப்பு ஏற்படுத்தி வழங்கப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்தும் வகையிலும், பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 கலைஞர் மகளிர் உரிமை திட்டம், விடியல் பயணம் திட்டம் போன்ற திட்டங்களும், மாணாக்கர்களின் உயர்கல்வியினை ஊக்குவிக்கும் வகையில் புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் உள்ளிட்ட சிறப்புத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் அனைவருக்கும் வீடு திட்டம் வாயிலாக அடுக்குமாடி குடியிருப்பு திட்டத்தில் கடலூர் மாவட்டத்தில் கடலூர் மாநகராட்சி பனங்காட்டுகாலனி திட்டப்பகுதி I மற்றும் II இல் 336 குடியிருப்புகள், செம்மண்டலம் திட்டப்பகுதியில் 272 குடியிருப்புகள், பரங்கிப்பேட்டை ஒன்றியம் அரியகோஷ்டி திட்டப்பகுதியில் 288 குடியிருப்புகள், பண்ருட்டி வட்டம் காடாம்புலியூர் திட்டப்பகுதியில் 504 குடியிருப்புகள், கிழக்குப்பம் திட்டப்பகுதி I மற்றும் II இல் 336 குடி யிருப்புகள், பண்ருட்டி நகராட்சி திருவதிகை திட்டப்பகுதியில் 144 குடியிருப்புகள், விருத்தாச்சலம் வட்டம் பாலக்கொல்லை 182 இரட்டை தொகுப்பு வீடுகள் 9 பல்வேறு திட்டப் பகுதிகளில் என மொத்தம் ரூ.205.90 கோடி மதிப்பீட்டில் 2,062 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கான நிரந்தர குடியிருப்பினை ஏற்படுத்தி வழங்கிட அரசின் பங்கீட்டுடன் பயனாளிகளின் குறைந்தப்பட்ச பங்குதொகையுடனும் மாநகரப் பகுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் குடியிருப்பு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்குடியிருப்பினை சிறப்பான முறையில் பயன்படுத்தி கொண்டு தங்கள் வாழ்வில் மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.


